# தலைவாசல் Thalaivaasal

எங்கள் பாரம்பரியம்

வீடு 01 வாசல் 46 | thalaivaasaltv@gmail.com | செவ்வாய்க்கிழமை | நவம்பர் 17, 2020




## பச்சை மீன் சாப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினர்

கொரோனா தொற்று ஏற்படுமென எண்ணி மீனை உட்கொள்வதற்கு பயப்பட வேண்டாம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திலிப் வெதஆராச்சி மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது பச்சையாக மீன் ஒன்றை உட்கொண்டு அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நாங்கள் மீனை பச்சையாக உட்கொள்வோம், பச்சையாக உண்ணும் போது சுவையாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்ட வழக்கின் எதிரொலி

# முல்லைத்தீவில் 180 ஏக்கர் காடழிப்பு அம்பலமாகியது!



முல்லைத்தீவில் தாக்குதலுக்குள்ளான ஊடகவியலாளர்கள் அடையாளப்படுத்திய பகுதி உள்ளடங்கலான நாகஞ்சோலை வனப்பகுதியில் 180 ஏக்கர் அரச காடுகள் அழிக்கப்பட்டுள்ளமை முல்லைத்தீவு பொலிஸாரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

சட்டவிரோத காடழிப்பு தொடர்பில் செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளர்கள் சண்முகம் தவசீலன் கணபதிப்பிள்ளை குமணன் ஆகியோர் தாக்கப்பட்டமை தொடர்பிலான வழக்கு விசாரணை 17.11.2020 இன்று முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த வழக்கில் இந்த வழக்கு விசாரணை தொடர்பில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலதிகமான தகவல்களை அவர்கள் சம்பவத்தினத்தன்று சென்று செய்திகேகரித்த வனப்பகுதி உள்ளிட்ட பகுதிகளை பார்வையிட்டு முழுமையாக சமர்ப்பிக்குமாறு பொலீசாரிடம் மன்று கேட்டதற்கு இணங்க பொலிசார் அன்றயதினமே (03-11-2020) ஊடகவியலாளர்கள் இருவரையும் அழைத்து

03

## யாழ். பல்கலைகழக மருத்துவபீட மாணவன் வீட்டிலிருந்து சடலமா மீட்பு



யாழ். பல்கலைகழக மருத்துவபீட மாணவன் ஒருவர் அவர் தங்கியிருந்த வீட்டிலிருந்து சடலமா மீட்கப்பட்டுள்ளார்.

கோண்டாவில் பகுதியில் அமைந்துள்ள வீட்டில் தங்கியிருந்து கல்வி கற்று வந்த மாணவன், இன்று வீட்டிலேயே சடலமாக மீட்கப்பட்டார்.

இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப விசாரணையில் தவறான முடிவின் அடிப்படையில் அவர் தனது உயிரை மாய்த்துள்ளார் என்று தற்போது அறியவந்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்த மாணவன் துன்னாலைப் பகுதியை சேர்ந்தவர் என்றும் கல்வி நடவடிக்கைக்காக கோண்டாவில் பகுதியிலுள்ள வீடொன்றில் தங்கியிருந்தமையும் தெரிய வந்துள்ளது.

## பகுதிநேர வேலைகளில் ஈடுபட அரச ஊழியர்களுக்கு அனுமதி


### வெளிநாட்டு தொழில்வாய்ப்பிற்கு இருவருட சம்பளத்துடன் விடுமுறை

நிறைவேற்றுத் தரமல்லாத அரச ஊழியர்கள் அலுவலக நேரத்தின் பின்னர் ஏனைய தொழில்களில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்படுவதுடன் வெளிநாட்டு தொழில் வாய்ப்பினை நாடுபவர்களுக்கு இரண்டு வருட கொடுப்பனவுடன் கூடிய விடுமுறை வழங்கப்படும் என்று பிரதமர் மகிந்த ராஜபக்ச, 2021ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழிந்துள்ளார்.

பிரதமரின் இன்றைய வரவு செலவுத் திட்ட உரையில்,

மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக சூரிய மின்சக்தியினைப் பெற்றுக்கொள்வதற்கு அரச ஊழியர்களுக்கான சிறப்புக் கடன் திட்டமொன்றினைச்

03



# கார்த்திகை 25-27 நினைவேந்தல்களை தடைசெய்யக்கூடாது

### பெற்றோர் சார்பில் ரிட் மனு

பயங்கரவாத தடைச் சட்டத்தையோ அல்லது தனிமைப்படுத்தல் சட்ட விதிகளையோ காரணம் காண்பித்து எதிர்வரும் நவம்பர் 25ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதிவரை நிகழவிருக்கும் நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடை செய்ய முயற்சிக் கூடாது என்று வடக்கு மாகாண

03

## ஜனவரி முதல் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் 1000 ரூபாவாக அதிகரிப்பு

2021 ஜனவரி மாதம் தொடக்கம் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் ரூபா 1,000 வரை அதிகரிப்பதற்கு முன்மொழிவதாக வரவுசெலவு திட்டத்தை சமர்ப்பித்து

03

## தினம் ஒரு ஆரோக்கிய தகவல் - 1

உடல் திணிவு சுட்டி = நிறை (கி.கி)/உயரம் (மீ)X உயரம் (மீ)

18.5 க்கும் 24.9 க்கும் இடையில் பேணுங்கள்

சரியான உடற் திணிவு சுட்டியினை பேணுவதற்கு

- ஆரோக்கியமான உணவு பழக்க வழக்கங்களை கடைப்பிடித்தல்
- வாரத்தில் குறைந்தது 5 நாட்களாவது 30 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்யுங்கள்.

**வைத்தியகலாநிதி கோ. றஜீவ்**

# போராளிகளை நினைவுகூரும் அடிப்படை உரிமை ஈழத்தமிழருக்கு உள்ளது



உலகத்தில் உள்ள அனைத்து மனிதர்களுக்கும் தமக்காக தங்களை அர்ப்பணித்தவர்களை நினைவுகூரவும், ஆராதிக்கவும் உரிமை இருக்கிறது. அதே போன்று மண்ணுக்காக உயிர்நீத்த போராளிகளை நினைவுகூரும் அடிப்படை உரிமை ஈழத்தமிழருக்கு உள்ளது என வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பாலச்சந்திரன் கஜதீபன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிக்கையில்,

“நினைவேந்தல்களை தடைசெய்யும் செயற்பாடுகள், தமிழ் மக்களின் உரிமை மீறல் செயற்பாடுகள் என வெளிப் படையாகவே தெரிகிறது.

03

**தரணி எங்கும் தமிழராய் இணைவோம்**



# ஈஸ்டர் தாக்குதல் சந்தேகநபர் இஹ்ஸான் வீட்டுக்கு அடிக்கடி சென்ற ரிஷாட்

முன்னாள் அமைச்சர்கள் ரிஷாட் பதியுதீன் மற்றும் மொஹமட் ஹலீம் ஆகியோர் பல சந்தர்ப்பங்களில் ஈஸ்டர் குண்டுவெடிப்பு தொடர்பாக கைது செய்யப்பட்ட முஹினுதீன் இஹ்ஸான் அஹமட்டின் வீட்டிற்கு சென்றிருந்தமை தற்போது தெரிய வந்துள்ளது.

ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று (திங்கட்கிழமை) முன்னிலையாகியிருந்த இஹ்ஸானின் வீடு அமைந்துள்ள பகுதியின் கிராமசேவகர் நிலாந்த சஞ்சீவா பொன்சேகா, சாட்சிய மளித்தபோதே இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இஹ்ஸான் வீட்டில் தங்கியிருந்தபோது இளைஞர்களுடன் பல்வேறு கலந்துரையாடல்களை நடத்தியதாக தனக்கு தகவல் கிடைத்ததாகவும் ஒரு தனியார் பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது, குறித்த நபர் ஒரு தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் குறித்த நபரின் வீட்டிற்கு ரிஷாட் பதியுதீன், ஹலீம் மற்றும் வேறு சில பிரமுகர்கள் வீட்டிற்கு வருகை தந்ததாக தனக்கு தகவல் கிடைத்ததாகவும் அவர் கூறினார்.

இதற்கிடையில், ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்பு தொடர்பாக இஹ்ஸானைத் தவிர அப்பகுதியில் வசிக்கும் வேறு நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்களா என்று அரச சட்டத்தரணி விசாரித்தார்.

இதற்கு பதிலளித்த சாட்சி, அப்பகுதியில் வசிக்கும் மொஹமட் அக்ரம் அவ்காம் மற்றும் மொஹமட் அக்ரம் சஜிஹா ஆகிய இரு சகோதரர்கள் கைது செய்யப்பட்டதாகவும் மேலும், வுஹாரி மொஹமட் ரபீக் என்ற மற்றொரு சந்தேக நபரும் கைது செய்யப்பட்டனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இஹ்ஸானும் அவரது குடும்பத்தினரும் வாடகைக்கு வசித்து வந்த வீட்டின் உரிமையாளர் தம்மிக்க பிரியந்த சமரசிங்கவும் ஆணைக்குழுவில் சாட்சியம் வழங்கியிருந்தார்.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 26 ஆம் திகதி அன்று இஹ்ஸ ான் கைது செய்யப்பட்ட இரண்டு நாட்களுக்குப் பிறகு பதியுதீன் வீட்டை விட்டு வெளியேறுவதைக் கண்டதாகவும்சுமார் 30 நிமிடங்கள் வீட்டில் கழித்தார் என்றும் குறித்த சாட்சி கூறியுள்ளார்.

# கொழும்பை 21 நாட்கள் முழுமையாக முடக்க வேண்டும்



கொழும்பு மிகவும் ஆபத்தில் உள்ளது என்றும் ஆகவே குறைந்தது இரண்டு வாரங்களாவது நகரத்தை முடக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மேயர் ரோஸி சேனநாயக்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர், நகரத்தை கடுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவராவிட்டால் கொரோனா வைரஸின் பரவலைக் கட்டுப்படுத்த முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகவே நகரத்திற்கு வெளியே வைரஸ் பரவாமல் தடுக்க கொழும்பில் 14 முதல் 21 நாட்கள் வரை முடக்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்.

இந்த காலகட்டத்தில் கொழும்புக்குள் நுழையவோ வெளியேறவோ எவரையும் அனுமதிக்கக் கூடாது என்றும் சேனநாயக்க கூறினார்.

மேலும் கடந்த சில நாட்களாக கொழும்பிலே அதிகளவிலான கொரோனா தொற்று உறுதியான நோயாளிகள் அடையாளம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம்களின் உடல்களை தலைமன்னாரில் அடக்கம் செய்யும் திட்டம்




கொரோனாவினால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்களை, தலைமன்னாரில் அடக்கம் செய்யும் திட்டம் தொடர்பாக அமைச்சரவை ஆராய்ந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொரோனா வைரஸினால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்களை, தகனம் செய்யும் செயற்பாட்டுக்கு சில அரசியல் கட்சிகள், பல அமைப்புக்கள் மற்றும் சர்வதேச அமைப்புக்கள் தொடர்ந்து எதிர்ப்புக்களை தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில், கொழும்பில் உள்ள முஸ்லிம் மையவாடியில் கொரோனா வைரஸினால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கான யோசனை அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டவேளை, பெரும்பாலான அமைச்சர்கள் இதற்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

மேலும் குறித்த நடவடிக்கையினால், இனபதட்டம் ஏற்படலாம் என பல அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனை தொடர்ந்தே தலைமன்னாரில் உடல்களை புதைப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்விடயம் தொடர்பாக ஆராய்ந்து உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு சுகாதார நிபுணர்கள் குழுவொன்றிடம் அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

குறிப்பிட்ட குழுவினர் பரிந்துரை செய்தால் மாத்திரமே அரசாங்கம் தலைமன்னாரை பயன்படுத்தும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.




# பேலியகொட மீன் சந்தையை திறப்பதற்கு எதிர்பார்ப்பு

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக மூடப்பட்டுள்ள பேலியகொட மீன் சந்தையை மொத்த விற்பனைகளுக்காக இரண்டு வாரங்களுக்கு பின்னர் மீளத் திறப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதாக கடற்றொழில் அமைச்சு அறிவித்துள்ளது.

கடற்றொழில் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இது தொடர்பான கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது.

இதற்கமைய பேலியகொட மீன் சந்தையில் பணப் பரிமாற்றங்களை இணைய வழியூடாக மேற்கொள்வது தொடர்பாக குறித்த கலந்துரையாடலில் ஆராயப்பட்டுள்ளது.

மேலும், உள்ளூரின் மீன் உற்பத்தியாளர்கள் மற்றும் கடலுணவு ஏற்றுமதியாளர்கள் அண்மைக் காலமாக எதிர்கொள்கின்ற அசௌகரியங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன், பேலியகொட மீன் சந்தையின் வியாபார நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்கின்ற முயற்சியின் முதற்கட்டமாக மொத்த வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

# பயணிகள் இருக்கையில் பொருட்களை ஏற்றி பொறுப்பற்ற தனமாக பயணித்த பேருந்து


யாழில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த தனியார் பேருந்தானது பயணிகளுக்கு மத்தியில் பொருட்களையும் ஏற்றி சென்றதால் அதில் பயணித்த பயணிகள் பெரும் அசௌகரியங்களுடன் பயணித்துள்ளனர்.

யாழில் இருந்து நேற்றைய தினம் திங்கட்கிழமை இரவு கொழும்பு நோக்கி புறப்பட்ட குறித்த தனியார் பேருந்தில் அதன் நடத்துனர் மற்றும் சாரதி ஆகியோர், பயணிகளின் இருக்கைகளிலும் பொருட்களை அளவுக்கு அதிகமாக ஏற்றியுள்ளனர். இதனால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

சுகாதார விதிமுறைகளை மீறியவாறு பயணிகளை சமூக இடைவெளிகள் எதுவும் இல்லாமல் இருக்கைகளில் அமருமாறு கூறி ஏனைய மிகுதி இருக்கைகளில் பொருட்களை அளவுக்கு அதிகமாக ஏற்றியுள்ளனர்.

குறித்த பேருந்து குளிரூட்டப்பட்ட பேருந்தாகையால் அதனுள் ஏற்றிய பொருட்களில் இருந்து துர்நாற்றம் வீசியுள்ளது. இதனால் பயணிகள் அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

பேருந்து சாரதி மற்றும் நடத்துனரின் பொறுப்பற்ற செயலால் பயணிகள் கொரோனா அச்சத்துடனும், அசௌகரியங்களுடனும் பயணித்துள்ளனர்.





# மாத்தளையில் உயர் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்

மாத்தளை மாவட்டத்தில் உயர் தொழில்நுட்ப பல்கலைக்கழகமொன்றை அமைப்பதற்கான கட்டுமான பணிகளை ஜனவரி மாதம் தொடங்க அரசாங்கத்தினால் திட்டமிடப்பட்டுள்ளது.

அதேபோன்று, 600 மில்லியன் ருபாய் செலவில் 6 தேசிய பாடசாலைகளை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அரசாங்க தரப்பினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய கொவிட் தொற்றுக்கு மத்தியில் நாடு மேலும் நெருக்கடியான நிலைக்கு தள்ளப்படுவதை தடுத்து, நாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுத்து செல்வதற்கு நாடளாவிய ரீதியில் செயற்படுத்தப்படும் கிராமிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் தேசிய வேலைத் திட்டத்தின் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு குழுவினால், மாத்தளை மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் பங்கேற்புடன் மாத்தளை மாவட்டத்தின் அபிவிருத்தி குறித்த கலந்துரையாடல் நேற்று (திங்கட்கிழமை) அம்மாவட்ட சுற்றுலா மேம்பாட்டு வளாக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இதன்போதே உயர் தொழில்நுட்ப பல்கலைக்கழகமொன்றை அமைப்பது தொடர்பாகவும், 6 தேசிய பாடசாலைகளை மாத்தளைக்கு பெற்றுக் கொடுப்பது தொடர்பாகவும் தீர்மானிக்கப்பட்டது.

அதேபோன்று குறித்த கூட்டத்தில், மாத்தளை மாவட்டத்தில் ஆசிரியர் பற்றாக்குறையை பூர்த்தி செய்ய 113 பட்டதாரி பயிற்சியாளர்கள் மற்றும் உயர் டிப்ளோமா கல்வியை நிறைவுசெய்த ஆசிரியர்களை நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், 2021 முதல் காலாண்டில் ஆசிரியர் பற்றாக்குறைக்கு முழுமையான தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும். எதிர்காலத்தில் ஆசிரியர் நியமனங்களின்போது பாடசாலைகளை அண்மித்து வசிக்கும் ஆசிரியர்களை அண்மித்த பாடசாலைகளுக்கு நியமிப்பது குறித்து கவனம் செலுத்தப்படும் எனவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

மாத்தளை மாவட்டத்தில் உயர் தொழில்நுட்ப பல்கலைக்கழகமொன்றை அமைப்பதற்கான கட்டுமான பணிகள் ஜனவரி மாதம் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

மாத்தளை மாவட்டத்தில் ஆசிரியர் உதவியாளர்களை நிரந்தரமாக்க தேவையான நடவடிக்கை மேற்கொள்வது குறித்து இந்த மேம்பாட்டுக் குழுவில் முன்மொழியப்பட்டது.

அனைத்து அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சுக்கள் இணைந்து நிறுவிய புதிய பொறிமுறை ஊடாக நேரடியாக கிராமங்களுக்கு வளங்கள் பகிரப்படும் வேலைத்திட்டமொன்றை தயாரித்தல், எதிர்காலத்தில் மாவட்டத்திற்கென ஆரம்பிக்க திட்டமிடப்பட்ட அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்வைத்தல் போன்ற அடுத்த ஆண்டு வரவு செலவுதிட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியை கிராமத்தின் அபிவிருத்தியில் நேரடியாக ஈடுபடுத்துவதற்கு மாவட்ட மட்டத்தில் யோசனைகளை பெற்றுக்கொள்வதும் இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கில் 24 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை 80ஆக அதிகரித்துள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர், வைத்தியர் அழகையா லதாகரன் தெரிவித்தார்.

ஏறாவூரில் ஒருவரும் கோறளைப்பற்று மத்தியில் ஆறு பேரும் இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய கிழக்கில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை 124ஆக அதிகரித்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேநேரம் கிழக்கு மாகாணத்தில் 9674பேர் வீடுகளில் தனிமைப்படுத்தப் பட்டுள்ளதாகவும் இவர்களில் 5091பேர் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் வைத்தியர் அழகையா லதாகரன் தெரிவித்துள்ளார்.

# ட்ரோன் கண்காணிப்பு: மேல் மாகாணத்தில் 95 பேர் கைது

கொட்டாஞ்சேனை, வாழைத்தோட்டம், ஜா-எல மற்றும் வத்தளை பகுதிகளில் தனிமைப்படுத்தல் நடவடிக்கையை மீறிய 95 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ட்ரோன் கண்காணிப்பு மூலமான நடவடிக்கையின்போதே குறித்த சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## போராளிகளை...

இந்த அரசு பக்கச் சார்பாக, இன ரீதியான செயற்பாட்டை மேற்கொண்டு வருவதாக தெரிகிறது.

இந்த புதிய அரசு கட்டாயமாக எமக்கு தடைகளை விதிக்கும் என தெரிந்து தான் நாம் தற்போது அரசில் உள்ளவர்கள் ஆட்சிக்கு வரக்கூடாது என கடுமையாக வேலை செய்தோம். இதை மக்கள் சிலர் இனியாவது புரிந்து கொள்ள வேண்டும்.

உலகத்தில் எங்கும் நடைபெறாத விடயம் தமிழர் பகுதிகளில் தான் நடக்கிறது. எமக்கு எதிரான இந்த செயற்பாடுகள் தொடர அனுமதிக்கக் கூடாது

போராளிகளை பயங்கரவாதத்துடன் சம்பந்தப்படுத்தி அரசு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. ஆனால் இங்கு உயிர்நீத்த மாவீரர்கள் இங்குள்ள பெற்றோரின் பிள்ளைகள் தான் சகோதரர்கள் தான் ஏதோ ஒருவகையில் அவர்கள் இங்குள்ளவர்களின் உறவுகள் தான் உயிர்நீத்த உறவுகளை குடும்ப அங்கத்தவர்கள் நினைவு கூரவேண்டும்.

இம்முறை நினைவேந்தல்களை தடுப்பதற்கு புது விளக்கங்கள் கொடுக்கிறார்கள். தொற்று நோய் பரவும் காராணத்தையும் குறிப்பிடுகிறார்கள்.

இத் தொற்றுநோய் உலகம் முழுவதும் உள்ள நோய். அதை நாம் அலட்சியம் செய்ய முடியாது. அதற்கு ஏற்ற வகையில் சுகாதார நடைமுறைகளின் படி அனைவரும் மாவீரர் வாரத்தை அனுஸ்டிக்க வேண்டும்.

பழைய விடயம் மறப்பது நாகரீகமல்ல - நடந்து முடிந்த விடயங்களை நினைவு கூருவது என்பது நாம் எப்படியானவர்கள் எமது பாரம்பரியம், எமது வரலாறு என்பன மறைக்கப்படமால் இருப்பதற்கு ஏற்ற விடயம். அதை மக்கள் உணர்ந்து, தொடர்சியாக இந்த நினைவேந்தல்களை எந்த தடை வந்தாலும் கடைப்பிடிக்க முன்வர வேண்டும்.

இந்த அரசு நினைவேந்தல் நிகழ்வுகளை மேற்கொள்ள அனுமதி அளிக்க வேண்டும் என கோருவதுடன், அதற்கான அழுத்தங்கள் கொடுப்போம். அனுமதியை பெறுவதற்கு அனைத்து முயற்சிகளும் எடுப்போம்” என்றார்.

## பகுதிநேர...

செயற்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

அரச ஊழியர்களுக்கு நியமனங்கள் மற்றும் இடமாற்றல்கள் வழங்கும் போது வதிவிடத்தைக் கொண்ட மாவட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குவதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

நிறைவேற்றுத் தரமல்லாத அரச ஊழியர்கள் அலுவலக நேரத்தின் பின்னர் ஏனைய தொழில்களில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்படுவதுடன் வெளிநாட்டு தொழில் வாய்ப்பினை நாடுபவர்களுக்கு இரண்டு வருட கொடுப்பனவுடன் கூடிய விடுமுறை வழங்கப்படும்.

வங்கிகளினால் வழங்கப்பட்ட அரச ஊழியர்களின் வீடமைப்பு மற்றும் ஆதனக் கடன்களுக்காக அறவிடப்படும் வட்டியினை ஆகக் கூடியது 7 சதவீதம் வரை குறைப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். இதன் மூலம் அரச ஊழியர்கள் மாதமொன்றுக்கு ரூபா 3,000 முதல் ரூபா 4,700 வரை சேமிக்க முடியும். எனக் குறிப்பிட்டுள்ளார்.

## ஊடகவியலாளர்கள்...

சென்று குறித்த பகுதிகளை பார்வையிட்டனர் .

இதனை தொடர்ந்து அவர்கள் மேற்கொண்ட விசாரணையின் போது ஊடகவியலாளர்கள் ஆய்வு செய்த இடங்களில் 180 ஏக்கர் அரச காடுகள் அழிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யார் அழித்தது என்பது தொடர்பில் இதுவரையில் உறுதிப்படுத்த முடியாது இருப்பதாக பொலிசாரும் வனவளத்திணைக்களத்தினரும் தெரிவித்துள்ளார்கள்.

குறித்த பகுதியில் காடழிப்பு தொடர்பில் சில வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அழிக்கப்பட்ட மரங்கள் ஒரு தொகுதியும் கைப்பற்றப்பட்டுள்ளன. ஆனால் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என மன்றில் தெரிவித்துள்ளனர்.

எனவே குறித்த பகுதியில் பாரிய காடழிப்பு சம்பவம் ஒன்று இடம்பெற்றிருப்பது பொதுவெளிக்கு கொண்டுவரப்பட்டுள்ளது இது தொடர்பான உரிய குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்படவேண்டும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் சூழலியலாளர்கள் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்

## கார்த்திகை...

மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோருக்கு கட்டளை வழங்குமாறு கோரி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தலையீட்டு நீதிப் பேராணை மனுக்கள் தாக்கல் செய்யப்படவுள்ளன.

போரில் தமது பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள் தமது சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஊடாக இந்த நீதிப்பேராணை மனுவை வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை தாக்கல் செய்யவுள்ளனர்.

இதற்கான அறிவித்தல் எதிர் மனுதார்களுக்கு மனுதாரர்களின் சட்டத்தரணியினால் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று அறியமுடிகிறது.

எதிர்மனுதாரர்களாக வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் பி.பி.எஸ்.எம். தர்மரட்ண, வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் ஆகியோரை குறிப்பிடப்படவுள்ளனர்.

பயங்கரவாத தடைச் சட்டத்தையோ அல்லது தனிமைப்படுத்தல் சட்ட விதிகளையோ காரணம் காண்பித்து எதிர்வரும் நவம்பர் 25ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதிவரை நிகழவிருக்கும் நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடை செய்யக் கூடாது என்று எதிர்மனுதார்களான வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோருக்கும் அவர்களின் பணியாற்றுபவர்களுக்கும் தலையீட்டு எழுத்தாணைக் கட்டளை வழங்குமாறு மனுதாரர்கள் கோரவுள்ளனர்.

மனுதாரர்களில் ஒருவரான வல்வெட்டித்துறை கம்பர்மலையில் வசிக்கும் சின்னத்துரை மகேஸ்வரி, தனது மகன் பண்டிதர் என்று அழைக்கப்படும் சின்னத்துரை ரவீந்திரன் 1985ஆம் ஆண்டு ஜனவரி 9ஆம் திகதி போரினால் உயிரிழந்தார் என்றும் அவரை நினைகூரும் வகையில் அனுமதியளிக்கவேண்டும் என்றும் கோரவுள்ளார்.

## ஜனவரி முதல்...

நிதியமைச்சரும், பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ இன்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதற்கமைவாக தோட்ட தொழிலாளர்களின் இந்த சம்பள அதிகரிப்பை வழங்க தவறும் தோட்ட நிறுவனங்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் பிரதமர் கூறினார்.

இதேபோன்று இலாபத்தில் இயங்காத தோட்ட நிறுவனங்களின் குத்தகை ஒப்பந்தம் தொடர்பில் மதிப்பீடு செய்வதற்கு புதிய சட்டங்கள் தயாரிக்கப்படும் என்றும் பிரதமர் இதன்போது தெரிவித்தார்.

# கொரோனா தடுப்பூசி 95% பயன்



கொரோனா வைரஸிற்கான புதிய தடுப்பூசி கிட்டத்தட்ட 95 வீதம் பயனுள்ளதாக இருப்பதாக அமெரிக்க நிறுவனமான மொடேர்னா நிறுவனத்தின் ஆரம்பத் தரவுகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, அமெரிக்காவின் பைசர் நிறுவனமும் தடுப்பூசி 90 வீதம் பயனளிப்பதாகத் தெரிவித்துள்ள நிலையில் விரைவில் மக்கள் பாவனைக்கு தடுப்பூசி வெளிவரும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த இரு நிறுவனங்களும் தமது தடுப்பூசிகளை வடிவமைக்க மிகவும் புதுமையான சோதனை அணுகுமுறைகளைப் பயன்படுத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இதுவொரு சிறந்த நாள் என மொடேர்னா மருந்து நிறுவனம் தெரிவித்துள்ளது.

அத்துடன், அடுத்த சில வாரங்களில் தடுப்பூசியைப் பயன்படுத்துவதற்கான ஒப்புதலுக்கு விண்ணப்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக குறித்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

## 387 கொரோனா தொற்று நோயாளிகள் நேற்று அடையாளம்

இலங்கையில் நேற்றைய தினம் (திங்கட்கிழமை) அடையாளம் காணப்பட்ட 387 கொரோனா தொற்று நோயாளிகள் தொடர்பான அறிவிப்பினை சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அந்தவகையில் நேற்று அடையாளம் காணப்பட்டவர்களில் அதிலகளவிலான அதாவது 231 பேர் கொழும்பு மாவட்டத்தை சேர்ந்தவர்கள் என்றும் 42 பேர் கம்பஹாவை சேர்ந்தவர்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 20 பேர் களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் 11 பேர் குருநாகல் மாவட்டத்தை சேர்ந்தவர்கள் என்றும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

02 பேர் காலியைச் சேர்ந்தவர்கள் என்றும் இரத்தினபுரி, கேகாலை, மொனராகலை, நுவரெலியா மற்றும் யாழ்ப்பாணத்தை சேர்ந்த தலா ஒருவர் அடங்குவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நாட்டில் இதுவரை கொரோனா தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 17 ஆயிரத்து 674 ஆக உயர்ந்துள்ளது.

இதில் 11 ஆயிரத்து 806 பேர் குணமடைந்துள்ளதுடன் 5 ஆயிரத்து 807 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை 61 பேர் மரணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திவுலபிட்டி, பேலியகொடையில் 14,170 பேருக்கு கொரோனா!

திவுலபிட்டி மற்றும் பேலியகொடை ஆகிய இரண்டு கொத்தணிகளில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 14 ஆயிரத்து 170ஆக அதிகரித்துள்ளது.

இலங்கையில்கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 17 ஆயிரத்து 674 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 810 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 11 ஆயிரத்து 806 ஆக அதிகரித்துள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில்கொரோனா வைரஸ் தொற்றினால் 61 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையிடமிருந்து படகுகளை மீட்காவிட்டால் போராட்டம் நடத்துவோம்



இலங்கையிடமிருந்து படகுகளை மீட்காவிட்டால் மீனவர்களை திரட்டி போராட்டம் நடத்துவோம் என தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ். அழகிரி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக நேற்று (திங்கட்கிழமை) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த அறிக்கையில் கே.எஸ்.அழகிரி மேலும் கூறியுள்ளதாவது, "இலங்கைக் கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டு யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் துறைமுகங்களில் நிறுத்தப்பட்டுள்ள இந்திய மீனவர்களுக்குச் சொந்தமான பல கோடி ரூபாய் மதிப்பிலான 121 மீன்பிடிப் படகுகளை பொது ஏலத்தில் விற்பனை செய்யலாம் அல்லது உடைத்து அப்புறப்படுத்தலாம் என்று யாழ்ப்பாணம் நீதிமன்றம் கடந்த நவம்பர் 7 ஆம் திகதி உத்தரவு பிறப்பித்தது.

இந்தத் தீர்ப்பு தமிழக மீனவர்களிடையே கடும் அதிர்ச்சியையும், பதற்றமான சூழ்நிலையையும் ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 2015 முதல் 2018 வரை பறிமுதல் செய்யப்பட்ட தமிழக மீனவர்களுக்குச் சொந்தமான படகுகளைத் திரும்பப் பெறுவதற்கான எந்த முயற்சியிலும் இந்திய அரசு ஈடுபடவில்லை.

கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் எல்லை தாண்டிய குற்றத்தின் கீழ் தமிழகம் மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த மீனவர்கள் 1,300 பேர் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மீனவர்களிடமிருந்து ஏறத்தாழ 350க்கும் மேற்பட்ட படகுகள் பறிமுதல் செய்யப்பட்டு இலங்கைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இலங்கை நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் தமிழகம் மற்றும் புதுச்சேரி மீனவர்களுக்குச் சொந்தமான பல கோடி ரூபாய் மதிப்புள்ள மீன்பிடிப் படகுகள் விரைவில் அழிக்கப்படுவதற்கும், ஏலத்தில் விற்பனை செய்வதற்கும் இலங்கை அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த நடவடிக்கையின் மூலமாக ரூபாய் 25 இலட்சம் முதல் 60 இலட்சம் வரையிலான மதிப்புள்ள படகுகள் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட்டால் ரூபாய் 3 முதல் 4 இலட்சம்தான் விலையாகக் கிடைக்கும்.

இதனால் மீனவர்கள் கடுமையான இழப்பைச் சந்திக்க வேண்டி வரும். இந்த ஏல விற்பனைக்கு மத்திய பா.ஜ.க.அரசும், தமிழக அ.தி.மு.க.அரசும் ஒப்புதல் வழங்கியுள்ளதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

இது ஏற்கெனவே மீன்பிடித் தொழிலினால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்து நிற்கிற மீனவர்கள் மேலும் கடுமையாகப் பாதிக்கிற நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் இருந்து படகுகளை மீட்டுக் கொண்டு வர முடியாது என மத்திய, மாநில அரசுகள் கருதுவது தங்களது இயலாமையையே காட்டுகிறது. இதற்கு ஈடுகட்டுகிற வகையில் மீன்பிடிப் படகுகளை இழக்கும் ஒவ்வொரு மீனவருக்கும் ஒரு புதிய படகை முழு மானியத்தில் வழங்குவதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். பறிமுதல் செய்யப்பட்ட படகுகள் மீட்கப்படாமல், நீதிமன்ற ஆணையின் மூலம் தமிழக மீனவர்கள் தங்களது மீன்பிடிப் படகுகளை இழந்ததற்குக் காரணம் மத்திய, மாநில அரசுகளின் அலட்சியப் போக்கு தான்.

எனவே, கடந்த சில ஆண்டுகளாகப் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு வரும் தமிழக, புதுச்சேரி மீனவர்களுக்குப் பேரிழப்பு ஏற்படாத வகையில் மத்திய, மாநில அரசுகள் இணைந்து தீர்வு காண தீவிர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

தமிழக அரசு, மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி, பறிமுதல் செய்யப்பட்ட 121 படகுகளை மீட்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும்.

கடந்த காலத்தில் இலங்கைத் தமிழர்களின் உரிமைகள் பறிக்கப்பட்ட போதும், தாக்குதலுக்கு உள்ளானபோதும் அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி, பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு இலங்கை எல்லையை மீறி விமானம் மூலம் உணவுப் பொட்டலங்கள் வழங்கியதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, இலங்கை அரசை ஏதோ ஒருவகையில் மத்திய அரசு அழுத்தம் கொடுத்து தமிழக மீனவர்கள் இழந்த படகுகளை மீட்கவும், இழப்பை ஈடுகட்டவும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு நியாயமானதீர்வு கிடைக்கவில்லையெனில், தமிழ்நாடு மீனவர் காங்கிரஸ் சார்பாக சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்திற்கு முன்னால் மீனவர்களை திரட்டி கடுமையான போராட்டத்தை நடத்த வேண்டிய நிலை ஏற்படும்" என அவர் குறித்த அறிக்கையில் எச்சரிக்கை விடுத்துள்ளார்

# மஞ்சள் இறக்குமதி தடையை நீக்குமாறு வலியுறுத்த வேண்டும்





மஞ்சள் இறக்குமதி தடையை நீக்குமாறு, இலங்கையை மத்திய மற்றும் மாநில அரசுகள் வலியுறுத்த வேண்டும் என பா.ம.க.நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக ராமதாஸ் நேற்று (திங்கட்கிழமை) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறியுள்ளதாவது, "கொரோனா உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் ஏற்றுமதி வாய்ப்புகள் குறைந்ததையடுத்து, ஈரோடு மஞ்சள் சந்தையில் மஞ்சள் விலை கடுமையான வீழ்ச்சி அடைந்துள்ளது.

இதனால் மஞ்சள் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மஞ்சள் ஏற்றுமதிக்கு புத்துயிரூட்டி, உழவர்களின் கவலையைப் போக்க மத்திய, மாநில அரசுகள் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாதது மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது.

இந்திய மஞ்சளுக்கு மருத்துவத் தன்மையும், நோய் எதிர்ப்பு சக்தியும் இருப்பதால், அதற்கு உலகம் முழுவதும் அமோக வரவேற்பு உள்ளது.

இந்தியாவின் புகழ்பெற்ற மஞ்சள் சந்தையாக ஈரோடு திகழ்வதால், தமிழகத்தில் சேலம், ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களில் விளைவிக்கப்படும் மஞ்சள் உலகின் பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவது வழக்கம் ஆகும்.

மேலும் ஈரோடு, சேலம் மாவட்ட மஞ்சள் உழவர்கள் பாதிக்கப்படும் போதெல்லாம் அவர்களுக்காக முதன்முதலில் குரல் கொடுப்பது பாட்டாளி மக்கள் கட்சி தான்.

அத்துடன் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா பாதிப்பு காரணமாக ஏற்றுமதி குறைந்திருப்பது மஞ்சள் விலை வீழ்ச்சிக்கு ஒரு காரணம் என்றாலும் கூட, இலங்கையில் மஞ்சள் இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள தடை தான் விற்பனை குறைவுக்கும் விலை வீழ்ச்சிக்கும் முதன்மைக் காரணம்.

ஈரோடு பகுதியில் விளைவிக்கப்படும் மஞ்சளின் பெரும்பகுதி இலங்கைக்கு தான் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது.

ஆனால், மஞ்சள் உற்பத்தியில் தற்சார்பு அடைய வேண்டும் என்பதற்காக இந்தியா உள்ளிட்ட எந்த நாட்டிலிருந்தும் மஞ்சள் இறக்குமதி செய்ய இலங்கை தடை விதித்திருக்கிறது.

அதனால், இலங்கைக்கான மஞ்சள் ஏற்றுமதி முற்றிலுமாக முடங்கியது தான் ஈரோடு சந்தையில் மஞ்சள் விலை வீழ்ச்சி அடைந்ததற்கு முக்கியக் காரணம் எனக் கூறப்படுகிறது.

இலங்கையின் இந்த முடிவு யாருக்கும் நன்மை பயக்கவில்லை. மாறாக, இரு தரப்புக்கும் பாதிப்புகளே ஏற்பட்டிருக்கின்றன. ஒருபுறம் ஈரோட்டு சந்தையில் விலை வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், மறுபுறம் இலங்கையில் மஞ்சளின் விலை வரலாறு காணாத அளவுக்கு அதிகரித்திருக்கிறது.

மேலும், மஞ்சள் மற்றும் தங்கக் கடத்தல்காரர்கள் மட்டும் தான் இந்தத் தடையால் பயனடைந்துள்ளனர். எனவே குறித்த தடை நீக்கப்பட்டால், இலங்கையில் மஞ்சளின் விலை எட்டில் ஒரு பங்காக குறையும்.

எனவே,இந்த விடயத்தில் மத்திய, மாநில அரசுகள் தலையிட்டு தீர்வு காணும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்காக மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்த வேண்டும்" என அவர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்